முருகப்பெருமான் துணை
அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும்,
அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்
எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால
பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

குரோதி வருடம் சித்திரை மாதம் 15 திகதி முதல்
குரோதி வருடம் சித்திரை மாதம் 22 திகதி வரை
(28.04.2024 ஞாயிறு முதல் 05.05.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தருமவழி காட்டி அருளும்
   தவசியே ஆறுமுக அரங்கனே
   வறுமை வெல்ல மனிதனுக்கு
   வாழ்வு நிலைபெற உயர்மார்க்கம்
2. மார்க்கம் அருளும் தேசிகனே
   மகான் உன்அவதாரம் போற்றி
   பார்த்துரைப்பேன் அகத்திய மகரிஷியானும்
   பாருலகில் அரங்கன் நீகேட்க
3. கேட்கவே இந்தியா தமிழகத்தில்
   குரோதி ஆண்டு தகர்திங்களில்
   திட்டமுடன் மூவைதிகதிமேல் இருபானீர் திகதிவரை
   தேசமெங்கும் நடக்கும் நிகழ்வாக
4. ஆகவே வருங்கால பலன்குறித்த
   அறிவிப்பேன் வார ஆசிதனை
   வகையாக தேர்தலை நடத்தி
   வல்லமையாக ஆளுமை புரிய விரும்பும்
5. விரும்பும் தலைமைகள் தானும்
   வினவிய வாக்குறுதி வழியில்
   அரும்பாடுபட்டு கடமைதனை
   ஆர்வமாகச் செய்தாலே போதும்

6. போதுமப்பா மக்களை காக்கும்
புண்ணிய பலமிக்க ஆட்சியாக
ஆதரவு ஞானிகளிடமும் பெருகி
அமைதி பாதுகாப்பு சமூக மாற்றமென

7. மாற்றமென சகலவகை தேறி
மக்களின் வாழ்வாதார நிலை
ஆற்றலாக உயர்ந்து நின்று
அறிவிப்பேன் இனிவரும் காலம்

8. காலமதில் தேர்தலுக்கான
கலகம் பணவலிமை என
சாலங்கள் புரியா எளிமைபட
சந்தித்து மக்களுள் மக்களாக

9. ஆகவே மேல்நிலை அடைந்து
அகிலத்துக்கே வழிகாட்டும்
மிகையான ஞானஆட்சியாக
மேலவர்கள் துணை நிற்கின்ற

10. துணை நிற்கின்ற தூயஆட்சி
தெரிவிப்பேன் நல்ஆட்சிதர நேரும்
இணையிலா தவசி அரங்கன் வழிவர
இந்தியா தமிழகத்தில் இந்தமாற்றம் நிகழும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

குரோதி வருடம் சித்திரை மாதம் 15ம் நாள் **28.04.2024** ஞாயிற்றுக்கிழமை முதல் குரோதி வருடம் சித்திரை மாதம் **22**ம் நாள் **05.05.2024** ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

தருமத்தின் வழிதனை உலக மக்களுக்கு காட்டி அதன் வல்லமைகளை உணர்த்தி மக்களை கடைத்தேற்றும் மகாதவசியே அரங்கமகா தேசிகனே! மக்களுக்கு உண்டான வறுமையை வென்று அவர்கள் நிலையான வாழ்வை பெற்று வாழ உயர் மார்க்கத்தை அருளி வழிநடத்தும் ஞானதேசிகனே! மகானே அரங்கமகா தேசிகனே! உமது அவதாரத்தை போற்றி வாழ்த்தியே

அரங்கா தாம் எதிர்காலம் குறித்து அகத்திய மகரிஷி எம்மிடம் கேட்க யானும் இந்தியா தமிழகத்திலே குரோதி வருடம் சித்திரை மாதம் **15**நாள் **28.04.2024** ஞாயிற்றுக்கிழமை முதல் குரோதி வருடம் சித்திரை மாதம் **22**ம் நாள் **05.05.2024** ஞாயிற்றுக்கிழமை வரை நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

தேர்தலிலே வெற்றி பெற வாக்குறுதிகளை அளித்திட்ட தலைமைகள் பொறுப்பேற்றதும் அவரவரும் அளித்திட்ட வாக்குறுதிகளை தவறாமல் மறவாமல் மக்களுக்கு செய்திட்டாலே போதுமப்பா அவர்கள் கொடுத்த வாக்கினை காப்பாற்றிய நல்அரசாக, மக்களைக் காக்கின்ற புண்ணிய பலம் மிக்க ஆட்சியாக மாறி மக்களின் ஆதரவும் பெருகி ஞானிகளின் ஆசியும் கிடைத்து அமைதியும், பாதுகாப்பும் மிகுந்த ஆட்சியாக சமூகமாற்றம் உண்டாகி சகலவிதத்திலும் தேறிடும் நல்லாட்சியாக மாறிடும்.

வாக்குறுதிகளை காத்திடும் அந்த ஆட்சியிலே மக்களின் வாழ்வாதாரம் உயரும் இந்தவிதமாய் சொல்லொன்று செயலொன்று இல்லாமல் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றினால் இனி வரும் காலங்களிலே தேர்தலில் வெற்றி பெற பணபலம் தேவையில்லையப்பா.

அப்படிப்பட்ட சூழல் உருவாகிடும். பொய்யான வாக்குறுதிகளை அளிக்காமல் எளிமைபட நடந்து மக்களோடு மக்களாக இணைந்து நின்று மேன்மையான நிலையை அடைந்து இந்த உலகிற்கே வழிகாட்டும் மேம்பட்ட ஞான ஆட்சியாக, ஞானிகள் துணையுடன் கூடிய நல்லாட்சியாக தூய ஆட்சியாக அமையும்.

இணையில்லா தவஞானி அரங்க மகானின் ஜீவகாருண்ய கொள்கைகளை ஏற்று கடைப்பிடித்தால் இந்தவிதமான நல்ல மாற்றங்களை நாடு பெறும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–